
எப்படிப் பிறந்தது?



சென்னை கல்வித்துறை வெளியீடு

எப்படிப் பிறந்தது?

[முதியோர் கல்வி—சுவடி 16.]

பு. பா. இராஜ இராஜேஸ்வரி.

சென்னை கல்வித்துறை வெளியீடு.

முதல் பதிப்பு—செப்டம்பர், 1956.

ஈஸ்டர்ன் பிரிண்டர்ஸ், சென்னை-2

முன்னுரை

குடியாட்சிக்குக் கல்வி அடிப்படை. அக்கல்வி முதியோர்க்கும் தேவை. எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டால் போதாது. மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க ஏற்ற நூல்கள் தேவை. அவை அதிகம் இல்லை. அவற்றை எழுதத் தனிப் பயிற்சி வேண்டும். அப்பயிற்சி முதியோர் இலக்கியப் பண்ணையில் அளிக்கப்பட்டது. இப்பண்ணை 1955-ம் ஆண்டில் பீளமேட்டில் நடந்தது. இதை நடத்தியது சென்னை அரசாங்கம். உதவியது இந்திய அரசாங்கம்.

இப்பண்ணையில் உருவானது இவ்வெளியீடு. இதைப்போல் வேறு சிலவும் வெளிவருகின்றன. முதியோர் படித்துப் பயன் பெறவேண்டு மென்பது எல்லோருடைய விருப்பம்.

சென்னை,
6-9-1956.


நெ. து. சுந்தரவடிவேலு,
பொதுக் கல்வி இயக்குநர்.

இதில் உள்ளவை.

எப்படிப் பிறந்தது தெரியுமா?

கமலா அவள் பெற்ருேர்களுக்கு ஒரே பெண். நல்ல நிலையில் உள்ள குடும்பத்துப் பெண் கமலா. அவள் வயது பத்து. கமலா வீட்டு வேலைக்காரன் கந்தன். கந்தன் எப்பொழுதும் கைச் சாடை காட்டியே பேசுவான். அது கமலாவுக்குப் புரிவதில்லை. கமலா அதன் காரணத்தைத் தன் தாயிடம் கேட்டாள்.

2. அவன் ஊமை.



அவன் ஊமை. அவனுல் பேச முடியாது.

கமலா: அம்மா, நம் கந்தன் எப்பொழுதும் சாடை காட்டியே பேசுகிருனே, அது ஏன்?

தாயார்: கமலா, அவன் ஊமை. அவனுல் பேச முடியாது. அவன் நம்மைப் போலவே எதுவும்

நினைக்கிருன். நினைப்பதைச் சொல்ல முடியாமல் கையால் சாடை காட்டிப் பேசுகிருன். பழக்கத்தால் நமக்கும் சாடையின் அர்த்தம் புரிகிறது.

கமலா : ஆமாம் அம்மா. அன்றைக்கு அப்பாவுடன் கடைத் தெருவிற்குப் போனேன். அங்கு ஒரே கூட்டம். சீனக்காரன் ஒருவன் பட்டுத் துணிகள் வைத்து இருந்தான். அவன் ஏதோ பேசிஞன். அவன் பேசியது ஒன்றும் புரிய வில்லை. அது ஏன் அம்மா ?

தாயார் : அவன் பேசிய மொழி நமது மொழி அல்ல. அது சீன மொழி. எனவே, உனக்குப் புரிய வில்லை.

3. சாடை செய்து பேசினர்.

கமலா : சரி. உலகத்தில் எத்தனை மொழிகள் இருக்கின்றன ?

தாயார் : அதைச் சொல்ல முடியாதே ! பல மொழிகள் இருக்கின்றன.

கமலா : அப்படியா ! இந்த மொழிகள் எல்லாம் எப்படிப் பிறந்தன ?

தாயார் : கமலா, அது ஒரு பெரிய கதை அல்லவா !

கமலா : கதையா ? அந்தக் கதையைச் சொல்லுங்கள் அம்மா, கேட்கிறேன்.

தாயார் : மனிதன் முதலில் நமது கந்தன் மாதிரி ஊமையாகத்தான் இருந்தான். மனிதனுக்குப்

பேசவேண்டும் என்ற ஆசை இருந்தது; வாயால் பேசத் தெரியவில்லை. அதனால் மனிதன் கையால் சாடை காட்டிப் பேசினான். நாமும் இப்பொழுது சில சமயங்களில் கையினால் சாடை காட்டிப் பேசுகிறோம் அல்லவா? நீயும் அன்று தெருவில் இருந்த கண்ணம்மாவைக் கை காட்டிக் கூப்பிட்டாயே, நம் பாப்பாவும் தனக்கு வேண்டியதைச் சாடை காட்டிக் கேட்கிறது. "வா" என்பதற்குத் தலை அசைத்துக் காட்டுகிறது.

கமலா: ஆமாம் அம்மா, கைச் சாடை காட்டியே மனிதன் வாழ்ந்தான் என்று சொன்னீர்கள். கைகளால் வேலை செய்கிறவன் எப்படிச் சாடை செய்ய முடியும்?

தாயார் : அவன் வேலை செய்வதை நிறுத்திவிட்டு, சாடை காட்டுவான்.

கமலா : பகலில் சாடை காட்டினால் தெரியும். இரவில் என்ன செய்வது ?

4. இருட்டில் எப்படிப் பேசினர் ?

தாயார் : நன்றாகக் கேட்டாய். இருட்டில் கைச்சாடை செய்தால் யாருக்குத் தெரியும் ? ஆதலால், தீ மூட்டுவான். தீ வெளிச்சத்தில் சாடை காட்டித் தன் கருத்தைத் தெரிவிப்பான்.

கமலா : அது சங்கடம் அல்லவா ? நினைத்த போது அப்படிப் பேச முடியுமா ?




தீ வெளிச்சத்தில் சாடை காட்டித் தன் கருத்தைத் தெரிவிப்பான்.

தாயார் : நல்ல கேள்வி! நினைப்பதைத் தெரிவிக்க வேலையை நிறுத்தி, சாடையால் பேச வேண்டும். இருட்டில் தீ மூட்ட வேண்டும். இது சங்கடமே. அதனால் சாடை காட்டிப் பேசும் பழக்கம் மாறியது. வாய் பேசும் மொழி பிறந்தது.


5. மொழி பிறந்தது.

மனிதன் முதலில் காட்டிலே வாழ்ந்தான். அவனுக்கு உணவு வேண்டும். காட்டில் அதற்காக வேட்டை ஆடினன். அப்பொழுது கிளி கொஞ்சுவதையும், குயில் கூவுவதையும் கேட்டான். சிங்கக் கர்ச்சனையையும், புலி உறுமுவதையும் கேட்டான். அம்மாதிரியே தானும் சத்தம் செய்ய நினைத்தான். காக்கை போல் “கா, கா” என்று கத்தினன். பசுவைப் போல் “அம்மா” என்று கத்தினன். தொண்டையில் இருந்து



சிங்கக் கர்ச்சனையையும் புலி உறுமுவதையும் கேட்டான்.

சத்தம் வந்தது. தனக்கும் குரல் இருக்கிறது என்று அவனுக்குத் தெரிந்தது. அவைகள் வாயை அசைத்து ஒன்ருடு ஒன்று பேசுவதைக் கவனித்தான். அதனுல் வாயால் பேச ஆரம்பித்தான். மொழியும் பிறந்தது.



அவைகள் வாயை அசைத்து ஒன்ருேடு ஒன்று
பேசுவதைக் கவனித்தான்.

6. பல மொழிகள் பிறந்த விதம்.

கமலா : அம்மா, மொழி பிறந்த கதை நன்ருக இருக்கிறது. அது இருக்கட்டும். நம் வீட்டு மாடியில் இருப்பவர்கள் மலையாளம் பேசுகிருர்கள்.

என் சிநேகிதி லீலா தெலுங்கு பேசுகிருள். எனவே, எல்லோரும் ஒரே மொழியில் பேசுவதில்லை. பலர் பல மொழிகளைப் பேசுகிருர்கள். அது ஏன்?

தாயார்: அதுவா? மக்கள் முதலில் ஒரே இடத்தில் வாழ்ந்தார்கள். ஒரே மொழியைப் பேசிஞர்கள். பிறகு அவர்கள் பிரிந்து பல வேறு இடங்களுக்குச் சென்ருர்கள். பிரிந்து சென்றவர் தனித் தனி மொழியை ஏற்படுத்திக் கொண்டனர். எனவே பல மொழிகள் பிறந்தன. நம் பாட்டியைக் காரைக்குடி மாமா "ஆய்ச்சி" என்று அழைக்கிருர். கோயம்புத்தூர் அத்தான்

"பாட்டி" என்று அழைக்கிறார். நீயோ "ஆயா" என்று கூப்பிடுகிறாய். அதனால் ஒரே சொல் பல ஊர்களில் பலவிதமாக வழங்குகிறது. பல ஊர்ச் சொற்களை நாமும் புரிந்து கொள்ள முடிகிறது. அதற்குக் காரணம் ஒருவரோடு ஒருவர் பழகுவதே.

கமலா : அம்மா, இது எல்லாம் எனக்கு இன்றுதான் தெரிந்தது. மொழி பிறந்து வளர்ந்த கதை நன்றாக இருக்கிறது. நாளைக்கும் இதைப் போலவே ஒரு கதை சொல்லுங்கள் அம்மா!

தாயார் : சரி, அப்படியே ஆகட்டும், கமலா.

சென்னை கல்வித்துறை
முதியோர் கல்வி வெளியீடுகள்

மடல்கள்—விலை ஒரு அணு

1. ஆணியும் நிமிஷமும்
2. கேள்வி பதில்
3. இவை ஆகாது
4. நாட்டின் பெருமை
5. கண்டு கற்போம்

சுவடிகள்—விலை இரண்டு அணு

1. பார்வதிக்கு ஒரே பிள்ளை
2. பெண்ணு? போரா?
3. நல்ல தீர்ப்பு
4. வரப்புத் தகராறு
5. ஊதாரி ராமனும் உழைப்பாளி கந்தனும்
6. சுவேதன்
7. சேவல் சண்டை
8. மந்திரம் இல்லை! மாயம் இல்லை !!
9. ஐயோ! தீ!
10. செவலை நொண்டுகிறது
11. வள்ளுவர் பேசுகிறுர்
12. ஒரு இனிப்பான செய்தி
13. புத்தர் வரலாறு
14. வண்ணனும் வண்ணாத்தியும்
15. வண்டி வளர்ந்த கதை
16. எப்படிப் பிறந்தது?
17. எப்படிச் செய்தனர்?
18. மணி என்ன?
19. வசதி வேண்டுமா?
20. பணம் சேர்த்தீரா?
21. முத்தையனுக்கு வழி பிறந்தது
22. வாழும் வழி
23. ராணி மாளிகை
24. பாம்பு கடித்தால்......
25. ஓடி ஒளிந்த ராமன்
26. கைகயே வேண்டாம் மச்சான்
27. மனம் மாறுமா?
28. குப்பையே மாணிக்கம்
29. நமது தேசியக் கொடி
30. வானம்

நூல்கள்—விலை இரண்டு அணு

1. மின்னலும் இடியும்
2. நீரில் மூழ்கினல்.........
3. முத்து ரத்தினம்
4. குடை சாய்ந்தது
5. ஒத்தை மாட்டு செக்கும் புகையில்லாத அடுப்பும்
6. பணம் வாங்காத வைத்தியர்

கிடைக்கும் இடம்:

சென்னை அரசினர் அச்சகக் கிளை,
(புத்தக விற்பனை நிலையம்)
166, மவுண்ட் ரோடு, சென்னை-2.

4403